தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண். 70/2026 நாள்: 29.06.2026

செய்திக் குறிப்பு

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–II (தொகுதி II மற்றும் IIA பதவிகள்)

(அறிவிக்கை எண்.11/2025)

இருவழித் தொடர்பு முறையில் மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை வெளியீடு

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–II (தொகுதி II மற்றும் IIA பணிகள்) (அறிவிக்கை எண்.11/2025, நாள் 15.07.2025) –ற்கான முதன்மைத் தேர்வுகள் 22.02.2026 மு.ப. மற்றும் 15.03.2026 மு.ப. & பி.ப. நடைபெற்றன. தொகுதி II மற்றும் IIA–க்கான முதன்மைத் தேர்வினை முறையே 987 மற்றும் 8,697 தேர்வர்கள் எழுதினர்.

மேற்கண்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி, தொகுதி II மற்றும் IIA–க்கான இருவழித் தொடர்பு முறையில் மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை (Marks and Rank Position in Interactive Mode) தேர்வாணைய வலைதளத்தில் (www.tnpsc.gov.in) 29.06.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வர்கள், தேர்வாணைய வலைதளத்தினை (www.tnpsc.gov.in) தொடர்ந்து பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்